உ
சிவமயம்







யாழ்ப்பாணம் - மூளாயூர் வாசர்

அமரர் திருமதி

திருஞானசம்பந்தமூர்த்தி செல்லம்மா

அவர்களின்

# "செல்லமுதம்"

02-11-2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம் - அராலி மேற்கு
கோட்டைக்காட்டைப் பிறப்பிடமாகவும்
மூளாயை வாழ்விடமாகவும் கொண்டவரும்
உயர்சைவவேளாண் குலமரபில் தோன்றியவருமான

# அமரர் திருமதி
# திருஞானசம்பந்தமூர்த்தி செல்லம்மா

அவர்களின்
சொர்க்கவாழ்வின் நினைவாக வெளியிடப்பெற்ற

# "செல்லமுதம்"

02-11-2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# சமர்ப்பணம்

எங்கள் குடும்ப விளக்காய்
எமக்கு நல்வழிகாட்டி
எம் உயர்விற்கு உறுதுணையாய் இருந்த
நீங்கள் எம்முடன் இல்லையாயினும்
உங்கள் இனிய நினைவுகளை
எங்கள் மனதில் சுமந்து கொண்டு
எமது கண்ணீர்ப் பூக்களால்
உங்கள் பாதக் கமலங்களைக் கழுவி
இம்மலரைச் சமர்ப்பணம் செய்கின்றோம்

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இங்ஙனம்
**பாச உறவுகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மலர்வு 10 * ** 07 * ** 1939

# அமரர் திருமதி
# திருஞானசம்பந்தமூர்த்தி செல்லம்மா

உதிர்வு 03 * ** 10 * ** 2015

## திதிவெண்பா

ஆண்டுமன்மத மாஷைனைய பட்ச
பூண்ட புரட்டாதி திங்கள் ஷஷ்டி அபரபட்சம்
செல்வத் திருமகள் செல்லம்மா - செல்வக்கணபதி
செங்கமலப் பொற்பாதம் சேர்ந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

### விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தங்கை.

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவ னன்றே.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம் புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ நினியே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கொடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு
பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற
உழறிஉமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேன் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டு நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போ துன்னடி யின்கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக்குருபர எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்துமு வரக்கத் தரரு மடிபேண

பத்துத்தலை தத்தக்கணை தொடு
ஒற்றைக்கிரி மற்றைப் பொழுதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரிய லிரவாகப்

பத்தற் கிரதத்தைக் கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தருபொருள்
பக்ஷித்தொடு ரக்ஷித் தருள்வது மொருநாளே

தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்க நடிக்கக் கழுகொடு கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத்தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்கு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை

கொட்டப்புற்றெழு நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வாழாது பெய்க! மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க! குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வத்திருமகள்

# அமரர் திருமதி. திருஞானசம்பந்தமூர்த்தி செல்லம்மா அவர்களின்

# வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

ஈழவள நாட்டின் சிகரமாய் விளங்கும் யாழ்ப்பாண நகரில் சைவப் பண்பாடும் தெய்வ பக்தியும், கல்வி, வீரம் என்பவற்றின் சிறப்புக்களும் ஒன்றுபட்டு நிலவும் அராலி மேற்குப் பகுதியில்,

*"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்*
*தொழுதுண்டு பின்செல் பவர்"*

எனும் குறளுக்கு இலக்கணமாய் வாழ்ந்த வைரவநாதர் சின்னம்மா தம்பதியினருக்கு இரண்டாவது மகளாக 10-07-1939 இல் பிறந்த இவருக்குச் "செல்லம்மா" என்னும் நாமம் சூட்டப்பெற்று வளர்பிறைபோல் வளர்ந்து வந்தார். இவரின் உடன்பிறப்புக்களாக சரஸ்வதி, சிவசுப்பிரமணியம், தவமணிதேவி ஆகியோரை அன்புச் சகோதரர்களாகப் பெற்று நகமும் சதையும் போல் பாசப்பிணைப்பில் திளைத்தனர்.

ஆரம்பக்கல்வியை அராலி வள்ளியம்மை தமிழ்க்கலவன் பாடசாலையில் கற்றார். கமத்தொழிலில் ஏற்பட்ட அதீத ஆர்வம் காரணமாக இவரின் பெற்றோர் 1950ஆம் ஆண்டு வன்னி மண்ணின் உருத்திரபுரம் என்னும் கிராமத்தில் குடியேறினர். இதனால் உயர்தரக் கல்வியை உருத்திரபுரம் மத்திய மகாவித்தியாலயத்தில் கற்கவேண்டியதாயிற்று. இவர் கல்வி கற்கும் காலத்தில் தன் நுண்மதித் திறத்தால் சகல துறைகளிலும் திறமைசாலியாகவும் வல்லவராகவும் திகழ்ந்தார்.

இவர் பருவ வயதை அடைந்ததும் மூளாயில் சைவ வேளாளர்குல திலகர் வேலுப்பிள்ளை நாகம்மா தம்பதியினரின் சிரேஸ்ட புத்திரன் திருஞானசம்பந்தமூர்த்தி அவர்களை 03-03-1959 இல் திருமணம் செய்து வைத்தனர். இதன்மூலம் அமரர் திருமதி ஆறுமுகம்அன்னலட்சுமிஅவர்களைமைத்துனியாகவும் சுப்பிரமணியம், மாணிக்கவாசகர் ஆகியோரை மைத்துனர்களாகவும் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"தற்காத்துத் தற்கொண்டான்பேணித் தகைசான்ற*
*சொற்காத்துச் சோர்விலாள் பெண்"* என்பதற்கிணங்க பேர்த்தியாருடன் வாழ்ந்துவந்த மைத்துனர்களுக்கு இவரின்வரவால் அன்பும் அரவணைப்பும் கிடைத்ததுடன் தாயாகவே திகழ்ந்தார். அவர்களின் திருமணங்களை உரிய காலத்தில் செய்துவைத்தார்.

பலநோக்குக் கூட்டுறவுச்சங்க விற்பனையாளராக இருந்த கணவரின் வருமானம் போதாமையால் மூளாய் தண்ணீர்தொட்டி சந்தியில் பலசரக்கு வியாபார நிறுவனத்தை ஆரம்பித்து திறம்பட நடாத்தி வந்தனர். கணவனைக் **"கந்தசாமி"** எனவும் இவரை **"செல்லம்"** எனவும் அழைப்பர்.

கந்தசாமி செல்லம் தம்பதியினரின் இல்லற பந்தத்தின் பலனாக முருகதாஸ், குகதாஸ், வேதவல்லி, ஜெயதாஸ், ஆனந்தவல்லி ஆகிய பிள்ளைச் செல்வங்களைப் பெற்றனர். இவரின் இரண்டாவது மகனான குகதாஸைத் தனது மைத்துனர் சுப்பிரமணியம் மனோன்மணி தம்பதியினரின் பிள்ளைகலி தீர்ப்பதற்காக ஆறாவது மாதத்தில் பிள்ளைத்தானம் செய்த பெருந்தகையாவார்.தனது பிள்ளைகளைக் கண்ணின் மணியாகக் காத்து கல்வி கேள்விகளில் வல்லவராக்கினார்.

மூத்த மகனான முருகதாஸிற்குச் சித்தன்கேணியைச் சேர்ந்த கார்த்திகேசு தனேஸ்வரி தம்பதியினரின் கனிஷ்ட புத்திரி புனிதவதியைத் திருமணம் செய்து கஜன், வாசுகி, மயூரன், ஜெயராம் எனும் பேரப்பிள்ளைகளைப் பெற்றார். இரண்டாவது மகனான குகதாஸிற்கு அளவெட்டியைச் சேர்ந்த செல்லத்துரை மங்களேஸ்வரி தம்பதியினரின் ஏகபுத்திரி தேமொழியைத் திருமணம் செய்து பிரணவியைப் பேர்த்தியாகப் பெற்றார். மூன்றாவது மகளான வேதவல்லியை தனது சகோதரன் சிவசுப்பிரமணியம் இராசலட்சுமி தம்பதியினரின் மகன் கருணானந்தனைத் திருமணம் செய்துவைத்து வக்சலா, திவாகரன், கிருபாகரன் ஆகிய பேரப்பிள்ளைகளைப் பெற்றதுடன் தனது அன்புப் பேர்த்தி வக்சலாவை சங்கரத்தை துணவியை வசிப்பிடமாகக் கொண்ட திருநாவுக்கரசு நாகபூஷணி தம்பதியினரின் கனிஷ்ட புத்திரன் லிங்கதாசனைத் திருமணம் செய்துவைத்து பேரனாக ஆக்கிக்கொண்டார். நான்காவது மகன் ஜெயதாஸிற்கு மூளாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சமதக்கினி மங்களம் தம்பதியினரின் மகளான தேவகியைத் திருமணம் செய்துவைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறினிவாஸ், சுதர்சினி, சுபகர்ணி ஆகிய பேரப்பிள்ளைகளைப் பெற்றார்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண போர்ச்சூழலில் 1995இல் வன்னிக்கு இடம்பெயர்ந்து வாழ்ந்துவரும் நாளில் 16-12-1996 இல் ஸ்கந்தபுரம் மணியம் குளத்தில் தனது கணவனை இழந்தார். பின் தன் சொந்த ஊரான மூளாய்க்கு 1997வந்து தன் மூத்த மகனுடன் வாழ்ந்து வந்தார்.

தனது கடைக்குட்டியும் செல்லமகளுமான ஆனந்தவல்லிக்கு 2002ஆம் ஆண்டு கொக்குவில் மேற்கைச் சேர்ந்த நவரத்தினம் பத்மாதேவி தம்பதியினரின் ஏகபுத்திரன் ரவிச்சந்திரனை வதுவை செய்துவைத்து அஷ்வினி, அரூஸ் ஆகிய பேரப்பிள்ளைகளைப் பெற்றார்.

2008ஆம் ஆண்டு இந்தியா சென்று பிள்ளைகளுடன் தலங்களைத் தரிசித்து வந்தார். இவர் தனது உற்றார், உறவினர், அயலவர்களின் விஷேட வைபவங்களில் முன்னின்று உதவிசெய்யும் பண்புடையவர்.

மூத்தமகனுடனும் பேரப்பிள்ளைகளுடனும் கடைக்குட்டி மகனான ஜெயதாஸின் விருப்பத்தின்படி இறையடி சேர்வதற்கு ஒரு மாதத்திற்கு முன் சிகிரியா, கதிர்காமம், மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி பகுதிகளிலுள்ள திருத்தலங்களைத் தரிசித்து இன்புற்றார்.


அன்புப் பேரர் லிங்கதாசன் வக்சலா தம்பதியினரின் ஓராண்டு திருமணநாளை 06-09-2015 இல் மிகச்சிறப்பாகச் செய்து புளகாங்கிதம் அடைந்தார். உறவினர் நண்பர்கள் வீடுகளுக்கு நடையாகச் சென்றுவருவார்."சாட்டில்லாமல்சாவில்லை"என்பதுபோல இவரின் இறப்பிற்கென்றே ஒரு நோய் வந்தது போல் 30-09-2015இல் யாழ் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 03-10-2015 சனிக்கிழமை பிற்பகல் 6.30 மணிக்குத் தனது சகோதர்களையும், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்களையும், உற்றார் உறவினர்களையும் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு வதிரன்புலோ சித்திவிநாயகர் பாதக்கமலங்களைச் சென்றடைந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம்மை வாழ வைத்த
கண்கண்ட தெய்வங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சிறந்ததொரு குடும்பப் பெண்ணாக வாழ்ந்து காட்டியவர் அமரர் அவர்கள்

அராலி மேற்கைப் பிறப்பிடமாகவும், மூளாயை வசிப்பிட மாகவும் கொண்ட அமரர் செல்லம்மா திருஞானசம்பந்தமூர்த்தி அவர்கள் சிறந்ததொரு குடும்பப் பெண்ணாக வாழ்ந்து காட்டியவர். அவர் வாழ்நாள் முழுவதையும் தனது குடும்பத்திற்காக அர்ப்பணித்தவர். இதனால் அவரது குடும்பம் இன்று நல்ல முறையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறது.

அன்னாரது மூத்தமகன் திரு.தி.முருகதாஸ் அவர்கள் தொல்புரம் மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாய சங்கத்தில் இணை முகாமையாளரும் கணக்காளருமாகச் சிறப்பாகச் சேவையாற்றுவதற் கும் அமரர் அவர்களது பங்களிப்பு முன்னிலை வகிக்கின்றது. இவர் தனது கடமைகளை நேர்மையுடன் செய்வதற்கு அன்னையினதும், கல்விகற்ற பாடசாலையினதும் வகிபாகம் முக்கியமானதாகும்.

தனது தாயாருக்கு வேண்டிய யாவற்றையும் மகன் முருகதாஸ் நல்ல முறையிலே செய்து வந்ததை நான் அறிவேன். ஒரு பிள்ளை தனது பெற்றோரை அவர்களது வயோதிப காலத்தில் எவ்வித குறையுமின்றிக் கவனிப்பின் அப்பிள்ளை தனது கடமையைச் சரிவரச் செய்துள்ளேன் எனத் திருப்தியடைய முடியும். பெற்றோரைப் பார்ப்பதற்கு இக்காலத்தில் எல்லோருக்கும் முடிவதில்லை. இது காலத்தின் கோலமாகும்.

அன்னாரின் இழப்பு குடும்பத்தினருக்கு பேரிழப்பாயினும், “ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ இம்மானிலத்தில்......” என்பதற்கிணங்க மனம் ஆறுதலடைய எல்லாம் வல்ல மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகரை அருள்புரிய வேண்டுகின்றேன்.

**தி. உதயசூரியன்,** ஜே.பி.
*கௌரவ தலைவர்,*
*தொல்புரம் மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாய சங்கம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# "சோதியில் மறைந்த செல்லம்மா!

நிமிர்ந்த நடை, சிறிய உருவம், சற்றுப் பருத்த உடல்வாகு, கூரிய பார்வை, அந்த மலர்ந்த முகம், அந்த மலர்ந்த முகத்தில், நெற்றியில் எப்போதும் பளிச்செனத் தெரியும் விபூதி திலகம் இவற்றிற்கு அணிகலன்களாக விளங்கிய "செல்லமக்கா" என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட திருமதி செல்லம்மா திருஞானசம்பந்தமூர்த்தி சோதியில் மறைந்துவிட்டார். அவர்களின் மறைவு ஓர் பேரிழப்பாகும்.

அன்னார் தன் உற்றார் உறிவினர் எல்லோரிடமும் அன்போடும், உரிமையோடும் எவரையும் அனுசரித்து அவர்களின் சுகநலன்களில் பங்குபற்றி, அறிவுரைகூறி, அன்பான பேச்சாலும் பண்பான நடையாலும் எடுத்த கருமத்தைத் திறம்பட முடிக்கும் செயற்றிறனும் மன உறுதியும் ஆளுமைத் தன்மையும் கொண்ட பெண்மணியாவர்.

**"அவருக்கு நிகர் அவரே தான்"**

மூளாய் கிராமத்தின் கண்போல விளங்குகின்ற "வதிரன்புலோ சித்திவிநாயகரில்" அரியபக்தி கொண்ட இவர், இத்தேவஸ்தான பொருளாளரின் அன்புத்தாயாருமாவார். மேற்படி ஆலயத்தில் தற்போது நடைபெறும் கும்பாபிஷேக திருப்பணியில் தன் குடும்ப அங்கத்தவர்கள் துணைகொண்டு பாரிய திருப்பணியைச் செய்ய ஒழுங்குகள் செய்துள்ளார்.

அவரைப் பிரிந்து துயருறும் பாசமிகு பிள்ளைகள் உறவினர் அனைவருக்கும் ஆறுதல் கூறுவதுடன் மன அமைதியைப் பெற எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிவாராக.

**"சித்திவிநாயகர் கருணை மகத்தானது"**

**க. செல்வராசா** J. P.
*தலைவர்*
*மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர்*
*தேவஸ்தான பரிபாலனசபை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# யாழ்ப்பாணம் - மூளாய்
# வதிரன்புலோ சித்திவிநாயகர் திருவூஞ்சல்

### காப்பு

சீராருங் கைலைமலை வாசரீசர்
சிற்பரம ரற்புதமெய்ச் சித்தியோங்குந்
தாராருமதவி கடத்தந்தி வக்த்ரர்
தருவளஞ்செய் மூளாய் நன்னகரமேவி
ஏராரும் புகழ் வதிரன்புல மிலங்கும்
இனியசித்தி விநாயகர்மே லூஞ்சலேத்தக்
காராருமொருமருப்புக் கருணைஞான
கணபதிதனிரு சரணங்காப்பதாமே. 01

### ஊஞ்சல் வர்ணம்

அருமறைகணான்குமுயர் தம்பமாக
ஆறங்கமுபநிடதம் விட்டமாகப்
பொருணிறையுமாகமஞ்சீர் நாணதாகப்
பூரணமார் பிரணவமே பீடமாக
உருணிறையும் பஞ்ச கலையமணிகளாக
உயரூஞ்சல் தனிவாஞ்சை யுண்மையாகத்
திருநிறையும் வக்ரதுண்ட வாடீரூஞ்சல்
சித்திவிநாயகமூர்த்தி யாடீரூஞ்சல். 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொலுவர்ணம்

சந்திரசூரியர் கவிகை வட்டந்தாங்கத்
தருப்பணமேயாதியன மல்கித்தேங்கத்
இந்திரனார் வலக்கைதனிலடப்பை தாங்க
எழில்நிருதி கோடிகங்கையேந்தித் தேங்க
சுந்தரமார்மதன் பனிநீர்வீசித்தாங்க
சுரமுனிவர் பூதகணமெங்குந்தேங்கச்
சிந்தைவளர் வக்ரதுண்ட வாடீரூஞ்சல்
சித்திவிநாயகமூர்த்தி யாடீரூஞ்சல். 03

## சம்பிரவர்ணம்

வரமருளுமுமைபாகராசி கூட
வாணியுடன் பூமகளுநாண்தொட்டாட்ட
பரமருவுரம்பையர்கள் நடனமாட
பாவைசித்திபுத்தியர்கள் பாங்குநாட
கருமருவுமாலாத்தி மகளிர்பாட
கணநாதர் மலர்மாரி தூவிநீட
திருமருவுவிநாயகரே யாடீரூஞ்சல்
சித்திவிநாயகமூர்த்தி யாடீரூங்சல். 04

## சபாவர்ணம்

மந்திரமார் வேதங்களெங்குமார்ப்ப
வரமடைவோர் வரதவெனப்போற்றிநிற்பத்
தந்திரமாராகம நூல்வல்லுனர்கள்
தகுமுறையிற் பூசனைகளன்பினேற்ற
வந்துனடி பணிந்தோமென்ன வன்பர்
வணங்கி மலர்தூவியார்ப்ப
சிந்துரமார் பாலசந்திர வாடீரூஞ்சல்
சித்திவிநாயகமூர்த்தி யாடீரூஞ்சல். 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொரூபவர்ணம்

உருமருவுபணாபரணவாடீரூஞ்சல்
உயராகுவாகனனேயாடீரூஞ்சல்
கருதரிய பாசாங்குச வாடீரூஞ்சல்
கதிதந்தந் தரித்தவனே யாடீரூஞ்சல்
மருமருவ பிரகாசவாடீரூஞ்சல்
மநதிரமார் பிரணவமேயாடீரூஞ்சல்
திருமருவுமானைமுகவா டீரூஞ்சல்
சித்திவிநாயகமூர்த்தி யாடீரூங்சல். 06

## வாத்தியவர்ணம்

பத்திசெறி தவில்படகந்திமிலை தக்கை
பணவநாகசுரமுறுமிகொம்பு பம்பை
சுத்தமுறுகுடமுளவுபீலியாதி
தொடுகடலொடுவமை சொலத்துலங்கியார்ப்ப
மத்தமறுகி தழிமலர்மாலையாட
வளமருவு ரம்பையர்கள் கீதம்பாடச்
சித்துலவுகசானனே யாடீரூஞ்சல்
சித்திவிநாயகமூர்த்தி யாடீரூஞ்சல். 07

## ஆலயவர்ணம்

வண்ணமுறு பவளமதினிலம்புதுக்கி
வளர்படிகச்சுவரெழுப்பி மரகதத்தின்
நண்ணுதரங்கிணி குயிற்றிமணியினாலே
நவையில் மகுடம் வரையினன்கினாற்றி
தண்ணமுறு சங்கநிதித் தவசியற்றித்
தளையனக வாலயத்திற்றனை விளக்கித்
திண்ணமுறுமாயூர வாடீரூஞ்சல்
சித்திவிநாயகமூர்த்தி யாடீரூஞ்சல். 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகரவர்ணம்

மத்தியெழுந்தரவிந்த மலரிற்றாவ
மாங்குயில் பூங்காவிலிருந்துமதனைக்கூவக்
கந்தியிடைச் செங்கயல்கள் சீறிவாவக்
கானமயில்முகில் வரவுகண்டுமேவ
முந்துதிருமந்தாரமலர்கள்தூவ
முதிர்மூளாய் வதிரபுரமுதல்வதேவ
சிந்துமதக்கணேசநம வாடீரூஞ்சல்
சித்திவிநாயகமூர்த்தி யாடீரூஞ்சல். 09

## வாழி

திருமருவு சித்தாந்த சைவம் வாழி
செகமுலவுமன்னுயிர்கள் சிறந்து வாழி
உருமருவுமூளாய் நன்னகரம் வாழி
ஓங்குவதிரன்புரமார் கோயில்வாழி
கருமருவு சித்திவிநாயகரும் வாழி
கருணைசெறி மெய்யடியார் கவினும் வாழி
மரமருவு திருவூஞ்சல்வாழி கேட்போர்
மலிவுபெறப்படிப்போரும் வாழிவாழி 10

## எச்சரிக்கை

சீரார்தரு கருணாகரசிவனாரருண்மகனே
ஏரார்தரு வதிரன்புரத்திறைவா எச்சரிக்கை
புகழ்மேவிய மூளாய்நகர் பொலிஐங்கரமுதல்வா
திகழ்ஞான மெய்வடிவே சிவகுமார எச்சரிக்கை
திருமாமறைவர் பூசனைசெயவேயொளிர் புனிதாவா
வரமார்ந்திடுமுமைபாலகவரதா எச்சரிக்கை
விதிமால்பணிதருசீர்ச்சித்தி விமலாமறைமுதல்
பதுமலயைமருகாசிவபாலா எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராக்கு

சித்திவிநாய முதல்வாசெல்வா பராக்கு
சிந்துநதி தந்தருளும் புதல்வாபராக்கு
சுத்தவதிரன்புரமார் சுமுகா பராக்கு
சுடருடனேமால்பணியு சமுகாபராக்கு
தொந்திவயிற்றைந்துகரத் தொந்தாய் பராக்கு
துதிபெருகும் மூளாயின் வந்தாய் பராக்கு
சிந்தைமகிழன்பர் பணிதேவே பராக்கு
சித்திதரு சுத்தநிலைக்கோவே பராக்கு
ஐந்தெழுத்தினுட்பொருளா மதிபாபராக்கு
ஆறினுறுமகவிதழினிதிபாபராக்கு

## லாலி

மங்குல்பொழிபல வளமைபொங்குதிருமூளாய்
வதிரபுநகரதிபவிரதநமதிதயா லாலி
சிங்கமயில் பெருச்சாளிசிந்துரநலிடபம்
தேரிவருமொரு முதல்வசித்திவிநாயகனே
லாலி
அங்கமுறுசித்திரையினமை பறுவதிதியின்
ஆனந்த தீர்த்த மருளையனினதபயம் லாலி
செங்கலவைசந்தனமுந் திவ்வியமருவெஷி
செறிபுயனே ஐங்கரனெ தேவநினதபயம் லாவி

## கப்பற்பாட்டு

ஏலேலோ ஏகரதம் சர்வரதம் பிரமரதம்
ஏலோலோ தந்தெய்யா ஏலி லலோ
பஞ்சபூதப்பலகை கப்பலாய்ச் சேர்த்துப்
பாங்கான ஓங்குமரம் பாய்மரங்கட்டி
நெஞ்சமனப்புத்தி ஆங்காரஞ் சித்தம்
மானாபிமானங் கயிறாகச் சேர்த்து
ஐந்தெழுத்தைக் கட்டிச் சரக்காக வேற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்புலன் தன்னிலே சுக்கானிறுத்தி
நெஞ்சுகடாட்சத்தாற் சீனிப்பாய்தூக்கி
சிவனுடைய திருவருளைச் சிந்தையில் நினைத்து
அஞ்சலான வெள்ளத்திற்றானே
அகண்டரதம் போகுதடா - ஏலேலோ
களவையுங் கோளையுந் தள்ளடா தள்ளு
கருணைக்கடலிலே தள்ளடா கப்பல்
நிற்குணந் தன்னிலே தள்ளடா தள்ளு
நிறைந்த பரிபூரணத்தாற் தள்ளடா தள்ளு
முக்கனை மூன்றையுந் தள்ளடா தள்ளு
முப்பாலுக்கப்பாலே தள்ளடா தள்ளு
திக்குத்திசை யெங்குந் தள்ளடா தள்ளு
திருமந்திரஞ்சொல்லித் தள்ளடா கப்பல்
பக்கமுடன் கீழ்மேலுந் தள்ளடா தள்ளு
பரவெளிக்கப்பாலே போகுதடாகப்பல் - ஏலேலோ
தந்தைதாய் சுற்றமும் சகலமு மறந்து
தாரஞ் சகோதரமானதும் மறந்து
விந்தைசேர் மாடமுங் கூடமும் மறந்து
மைந்தருஞ் செல்வமும் வாழ்வும் மறந்து
பந்தமும் நேசமும் பாசமும் மறந்து
பதினாலு லோகந்தன்னையும் மறந்து
இந்திரியர் இரட்சித்த கப்பலிலேறி
ஏகாந்தமானதொரு கடலிலே தள்ளி
அந்தரமானவெளி ஆனந்தவெள்ளத்தில்
அழுந்துதையோ கப்பிலிதோ - ஏலேலோ.

## மங்களம்


மங்களம் மங்களம் நித்தியசுப மங்களம் மங்களம்
கங்கையுமை மைந்தருக்குக் கலைமதிநேர் தந்தருக்குப்
பொங்குமூளாய் வந்தவர்க்குப் புண்ணியஞானந்தந்தவர்க்கு-மங்களம்
சீர்வதிரநாதருக்குச் செங்கமலப்பாகருக்கு
ஏரருளும் போதருக்கு யானைமுக நீதருக்கு - மங்களம்
சித்திவிநாயகர்க்கு செய்யவருட்டாயகர்க்கு
சுத்தமலர்ச்சாயகர்க்கு சொல்லருநம் நாயகர்க்கு-மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



26-08-1991 இல் தனது மூத்தமகனின் திருமணத்தின் போது



2008 இல் சென்னை விமான நிலையத்தில்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# யாழ்ப்பாணம் - மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி திருவூஞ்சல்

### காப்பு

சீரேறுமூளாய் நன்னகர மோங்குஞ்
சிவமேறுவதிர புரச்சேந்தர்நீபத்
தாரேறுபுயசயிலரடியர் பங்கர்
தவமேறுஞ்சீர்முத்துக் குமாரசாமி
நீரேறு திருவூஞ்சற்றமிழ் நிகழ்த்த
நிலவேறுமொரு மருப்பர் நிமலஞானக்
காரேறு திருமேனிச் சித்திவேளங்
கலினேறுங்கமலபதங் காப்பதாமே. 01

### ஊஞ்சல் வர்ணம்

தன்னிகரினாதிசக்தி தம்பமாகத்
தழைபெரியகுடிலை மனுவிட்டமாக
முன்னுகலையழகொழுகு கயிறதாக
மொழிமந்த்ரசக்திவகைபீடமாக
நன்னயமார்பிரபு சத்தியணிகளாக
நண்ணு திருவூஞ்சறனில் வாஞ்சையாகப்
பொன்னிலகுவதிர புரவாடீரூஞ்சல்
புனித முத்துக்குமாரகுக வாடீரூஞ்சல். 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொலுவர்ணம்

அரகரவென்றிசையடையார் துள்ளியார்ப்ப
அண்டர்சொரிமலர்மாரியவனிதூர்ப்பக்
கரகமலமெதிரேந்திமுனிவரார்ப்பக்
காகளமேயாதியென கனைந்து சீர்ப்ப
வரகருணையுமையம்மையருளிற் பார்ப்ப
மைந்தவெனப் பரமசிவன் மகிழ்ந்துகாப்பப்
புரவதிரவதிர புரவாடீரூஞ்சல்
புனித முத்துக்குமார குகவாடீரூஞ்சல். 03

### சம்பிரமவர்ணம்

பொருவரிய கதிர்மதியங்கவிகை பற்றப்
பொலிவாயுவாலவட்டம்புனைந்துசுற்றத்
திருவளஞ்சாங்காற்றி வருணன் றெற்றத்
தீவர்த்தியனலேத்தச் செறியுங்கொற்ற
வரமறலிநிருதியுடை கைவாழ்பற்ற
மனுமந்த்ரவேதயிசை வளர்ந்தேயுற்ற
புரிமுதலாம் வதிரபுரவாடீரூஞ்சல்
புனித முத்துக்குமாரகுகவாடீரூஞ்சல். 04

### சபாவர்ணம்

இருக்குமுதல் வேதங்களெங்குமோங்க
இருடியர்கடுதிமறைகளிசைந்துதேங்க
தருக்கினொடுநூல்வல்லோர்நிற்பப்பாங்கர்
சதுர்மறையோன்முதலானோர் பூசைதாங்க
விருப்புமுடனடியவர்கள் விளைந்துதூங்க
வீரவாகாதியர்கள் மருங்குவீங்க
பொருப்பமரும் வதிரபுரவாடீரூஞ்சல்
புனித முத்துக்குமாரகுகவாடீரூஞ்சல். 05

### சொரூபவர்ணம்

திருமருவுமோராறுவதனமின்னச்
சிங்கார விழிக்கருணைதிகழ்ந்துதுன்ன
உருமருவும் புயநிரைகள் படைகள்மன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபயபதமுபவீதமுதலமுன்னக்
கருதுநமதிருவினைகளொருங்குபின்னங்
காணும்வகைமயிலாடக்கதிசம்பன்ன
பொரிவரிய வதிரபுரவாடீரூஞ்சல்
புனித முத்துக்குமாரகுகவாடீரூஞ்சல் 06

## வாத்தியவர்ணம்

சத்தமுறுதவில் பம்பைதக்கைதாளம்
தரணிபுகழ் நாககூரங்கொம்புவேணு
சித்தமுறுகுடமுளவு திமிலைபீலி
செப்பரியபணவமொடு உறுமிதித்தி
சுத்தமுறு மல்லரியே முரசுசங்கந்
துடிகடலின் முளக்கமெனத்துளங்கியார்ப்ப
புத்தியுறு வதிரபுரவாடீரூஞ்சல்
புனித முத்துக்குமாரகுகவாடீரூஞ்சல் 07

## ஆலயவர்ணம்

வடிவமரும்துவரினாநிலம்விளக்கி
மகிழ்கனகச்சுவரியற்றிமணிகளாலே
படிவமுறுவிட்டரங்கள்பயிற்றிமேலும்
பண்புநிறைமரகதத்தால் மகுடமாற்றித்
துடிபதுமவாசனமுந்துலங்கவாங்கு
சொல்லரியவாலயத்திற்சுவர்கள்மேவிப்
புடைபரவு வதிரபுரவாடீரூஞ்சல்
புனித முத்துக்குமாரகுகவாடீரூஞ்சல். 08

## நகரவர்ணம்

செங்காவிமுகைவிரித்துவாசம்வீசத்
தேமாவிற்குயிலோசைதிகழ்ந்துபேசக்
கொங்காருஞ் சிறுதென்றலசைந்துழூசக்
குலைசாய்த்து நெல்வணங்கக்குளிருந்தேச
சிங்காரமூளாயாம்புரவிஸ்வாச
செயசூரசங்காரகுறமின்னேச
பொங்காதி வதிரபுரவாடீரூஞ்சல்
புனித முத்துக்குமாரகுகவாடீரூஞ்சல். 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழி

மிக்கதிருவைதிகவான் சைவம் வாழி
மேதினியோர்புகழ் மூளாய்நகரம் வாழி
தக்கநிதிவதிரபுரநகரம் வாழி
தகுசித்திவிநாயகனார் கருணைவாழி
மிக்கமுத்துக்குமாரகுகன் கருணைவாழி
விழையமுகத்திருவூஞ்சல் மிகவும் வாழி
தொக்கதிருத்தொண்டர் சிவதருமம் வாழி
தொல்லுலகமும் மாரிசொரிந்துவாழி

## எச்சரிக்கை

சீரார்தருமூளாய்நகர்திகழும் வரபுரனே
ஏரார்தருகருணாகரவிறைவாஎச்சரிக்கை
பாலார்விழியுமை தந்தருள்பகவாவடிவேலா
நீலார்மயிலுகந்தாயருநிமலா எச்சரிக்கை
மதியார்சடைவிடையோனருள் மகனேயறுமுகனே
துதியார்வடி நெடுவேல்தரிசுகிர்தா எச்சரிக்கை
மதிவாண்முகமிழிர் தெய்வமின் வள்ளிமணவாளா
கொதிசூரசம்மார முத்துக்குமாரா எச்சரிக்கை

## பராக்கு

சித்திபொலி வதிரபுரச் செந்தாபராக்கு
சிந்தனைநினைந்தவர்முன் வந்தாய் பராக்கு
புத்திமுத்தியத்தனையுந்தந்தாய் பராக்கு
புண்ணியசிவசுப்பிரமண்யகந்தா பராக்கு
வெற்றிவடிவேல் பிடித்த விமலாபராக்கு
வேதாந்தத்துட்பொருளாமமலாபராக்கு
கற்றவர்களுன்னுபதகமலாபராக்கு
கண்டவர்கள் விண்டறியா நிமலாபராக்கு
முத்துக்குமார சிவமுருகா பராக்கு
முந்துவினசிந்தினருக் கருகாபராக்கு
நத்துவளர் கைத்தலரின் மருகா பராக்கு
நாதாந்தத்துள்ளொளியினருகாபராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாலி

திருவளரும் மருமனவிளைசெல்வமருகோனே
சித்திசொலிவதிரபுர செய்யமுருகோனே - லாலி
உருவளரும் மயிலினொளிருகித வடிவேலா
உம்பருடன் னிம்பர்பணியுமையுதவுபாலா - லாலி
சித்திவிநாயகவனுசவுத்தமவொய்யாரா
தெய்வமயில்வள்ளிபுணர் தெய்விகசிங்கார - லாலி
செல்வமுத்துக்குமாரமிகுதெய்வகுருநாதா
தேவருடன்முனிவர்மலர்சிந்துதிருப்பாதா - லாலி

## கப்பற்பாட்டு

ஏலேலோ தத்தெய்தாம் ஏலேலோ
சுந்தரஞ்சேர் கைலைதன்னில்
நாளுந் தோகையுமையுடன் வாழுஞ்
சந்திரசேகரனுதவும் முருகன் தன்மேற் கப்பற்றமிழ்பாட
முத்துகுருகுலர்கதையை மேருவினிற்றீட்டி
முதுகயமுகத்தன் முதலசுரர்களை வீட்மித்
தொந்தியது நிறையவேயவலப்பமாட்டித்
தொல்லுமறையாகமங்களை யுலகில்நாட்டி
வந்துதொழுமிரவலர்க்கே நிதிகள்காட்டி
வயங்கிரலைதரு வீரகத்திதனை யோட்டிச்
சிந்தைபரிபூரணத்துடன் மறைசைவைகுந்
சிந்துரமுகக்கடவுளைத்துதி செய்வோமே - ஏலேலோ
ஏர்மேவுமேராவும்வங்குமிலங்குமரப்பலகைகளும்
பேர்மேவுவாரிகளும் அணியப்பிறத்தலைசேர் கட்டைகளும்
சீரானசீனியொடு பூதாறுதட்டுஞ்
சிறந்தகாம்பறையோடுலாத்துப்பலகையும்
மேருவேநிகரான வலிய பாய்மரமும்
மேலுள்ள காவியாச்சவுதானிமரமும்
பேரான ஆலாத்துக்கயிறுடன் கப்பியும்
பெரிதான பருமல்பாய்ச் சீலையுந் கொடிகளுங்
கூரானநங்கூரஞ் சுக்கானுமாறுங்
குணமான கண்ணாடி சமுக்காவுமாகச்
சார்பான வேதங்களாகமங்கலைகளுந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஸ்திரமிவைகொண்டு கப்பலுண்டாக்கிக்
கார்மேவுமாகாசவாழிவழி செல்லக்
கந்தனுக்கே தந்தை தந்தருளினாரே - ஏலேலோ
அண்டமெல்லாம் படைத்தருளும்
எங்கள் ஆறுமுகவேல்முருகர்
சண்டைசெய்து வெற்றிகொண்ட
செய்திதனைச் சூரன்றனக்குச் சொல்ல
மிண்டியெழுமசுரப் படைகளுடன் வந்து
வீரமுடன் வில்லிலே வைரக்கணைபூட்டி
மிண்டியே பொருகின்ற வேளைதனில் முருகர்
விசயமுளவேலாயுதந்தனை விடுத்து
கண்டதுண்டங்களா யவுணரை யறுத்துக்
கடியசூரன்றனையுமிரு பிழவதாக்கி
வென்றபின் மயில்சேவல் வடிவமாய் வரவே
வெற்றியுள்ள வாகனத்தைத் தன்வசத்திலாக்கி
அண்டர்தன் சிறையதனை யப்பொழுதேநீக்கி
அனைவருங் கூடியே கப்பல்மேலானார்
கொண்டல் நிறப்பீரங்கி தனில் வேட்டுத்தீருங்
கோலமுள்ள கப்பலைத்திருப்பி விடுமப்பால்-ஏலேலோ

## மங்களம்

மங்களம் மங்களம் சுத்தசுப மங்களம் மங்களம்
பொங்குமூளாய் வாசருக்குப் புண்ணியமுருகேசருக்கு
நங்கைவள்ளி நேசருக்கு நாதாந்தப்பிரகாசருக்குமங்களம்
முத்துக்குமாரருக்கு முந்துநீபத் தாரருக்குச்
சித்திசொலி தீரருக்குச் செயவதிரச்சீரருக்கு-மங்களம்
சித்திநல்விநாயகர்க்குந் தேவசேனை நாயகர்க்கும்
சுத்ததத்துவதாயகர்க்குந் துய்யவச்சிர சாயகர்க்கும்-மங்களம்
அன்றில் வெற்பெறிந்தவர்க்குஆரண நூலறிந்தவர்க்கு
என்றுமெங்குஞ் செறிந்தவர்க்கு எண்ணிலாற் பிறிந்தவர்க்கு-மங்களம்

ஓம் சரவணபவாய நம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறையடி சேர்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்
தனது பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் சகிதம் சுற்றுலா சென்ற போது



25-10-2002 இல் நிகழ்ந்த
கனிஷ்ட புத்திரியின் திருமண நிகழ்வில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயங்களில் மகோற்சவ காலங்களில் நடைபெறும் கொடியேற்றம் கொடியிறக்கம் செய்யப்படும் வேளைகளில், சந்தி பூசையில் பாடவேண்டிய திருமுறைகளில் சில.

திருச்சிற்றம்பலம்

**கொடித்தம்பத்திற்கருகில்**

பண் : **தக்கராகம்** இராகம்: காம்போதி

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுரவ மென்கொலோ

பண் : **தக்கராகம்**

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடம்சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர் கோல மெலாம்செய்து பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையைவாட
மயல்செய்வதோ இவர்மாண்பே.

பண் : **இந்தளம்**

சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ விவளுண் மெலிவே.

பண் : **இந்தளம்**

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
- நல்லூரருட் டுறையுள்
அத்தாவுனக் காளாய்இனி அல்லேனென லாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரம்மசந்தி ஆகாசம்

பண் : **மேகராககுறிஞ்சி** இராகம் : **நீலாம்பரி**

நீறு சேர்வதோர் மேனியர் நேரிழை
கூறு சேர்வதோர் கோலமாய்
பாறு சேர்தலைக் கையர் பராய்த்துறை
ஆறு சேர்சடை அண்ணலே

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைமேலுந்தி
அலமந்த போதாக வஞ்சேலென் றருள்
செய்வா னமருங் கோயில்
வலம் வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சி
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்
பார்க்குந் திருவையாறே.

துஞ்சவருவாருந் தொழுவிப்பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரு முனைநடப்பாய்
வஞ்சம் படுத்தொருத்தி வானாலகொள்ளும் வகைகேட்
டஞ்சும் பழையனூர் ஆலங்காட் டெம்மடிகளே.

பிரமனுந் திருமாலுங் கைதொழப் பேரழலாய பெம்மா
னரவஞ் சேர்சடை யந்தண னணங்கினோ டமருமிடம்
கரவில் வண்கையினார்கள் வாழ் கலிக்கச்சிமா நகருள்
மரவஞ் சூழ்பொழி லேகம்பந்தொழ வல்வினை மாய்ந்தறுமே.

## இந்திரசந்தி - கிழக்கு

பண் : **காந்தாரபஞ்சமம்** இராகம் : **கேதாரகௌளை**

சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே.

இடரினுந் தளரினு மெனதுறுநோய்
தொடரினு முனகழல் தொழுதெழுவேன்
கடல்தனி லமுதொடு கலந்த நஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே
இதுவோ வெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ வுனதின் னருள ஆவடுதுறையரனே.

துஞ்சலும் துஞ்சலில்லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே.

## அக்கினிசந்தி - தென்-கிழக்கு

பண் : **கொல்லி** இராகம் : **நவரோஜ்**

கூற்றாயினவாறு விலக் ககலீர்
கொடுமை பலசெய்தன நானறியேன்
னேற்றாயடிக்கே யிரவும் பகலும்
பிரியாது வணக்குவ னெப்பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
வாற்றே னடியேனதி கைக்கெடில
வீரட்டானத் துறையம்மானே.

சலம்பூ வொடு தூப மறந்தறியேன்
தமிழோ டிசைபாடல் மறந்தறியேன்
நலந் தீங்கிலு முன்னை மறந்தறியேன்
னுன்னாம மென்னாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலி கொண்டுழல்வா
ருடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம்மானே.

மானி னேர்வழி மாதராய் வழுதிக்கு மாபெருந் தேவிகேள்
பானல் வாயொரு பாலனீங்கிவன் என்றுநீ பரிவெய்திடேல்
ஆனைமாமலை யாயியாய விடங்களிற் பலவல்லல்சேர்
ஈனர்கட் கெளியேன லேன்திரு வாலவாயரன் நிற்கவே.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்ல.்.துறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

## யமசந்தி - தெற்கு

பண் : **கௌசிகம்** இராகம் : **பைரவி**

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறி குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதனாமம் நமச்சி வாயவே.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைக
ளில்லா ரேனுமி யம்புவ ராயிடி
னெல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரா
னல்லார் நாம நமச்சி வாயவே.

குற்றநீ குணங்கணீ கூடலால வாயிலாய்
சுற்றநீ பிரானுநீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்துநீ யருத்தமின்ப மென்றிவை
முற்றுநீ புகழ்ந்து முன்னுரைப்ப தென்னமுகமனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிருதிசந்தி - தென்-மேற்கு

பண் : **நட்டபாடை** இராகம் : **கம்பீரநாட்டை**

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித் திரள்மழலைம் முழவதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே.

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம் மதயானை யுரிபோர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழுபாலாவியின் கரைமேல்
செத்தா ரெலும்பணி வான்திரு கேதீச்சரத்தானே.

அங்கத் துறுநோய்கள டியார் மேலொழித்தருளி
வங்கம் மலிகின்ற கடன் மாதோட்ட நன்னகரில்
பங்கஞ் செய்த மடவாளோடு பாலாவியின் கரைமேல்
தெங்கம் பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சரத்தானே.

## வருணசந்தி - மேற்கு

பண் : **சீகாமரம்** இராகம் : **நாதநாமக்கிரியை**

கண்காட்டு நுதலானுங் கனல் காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி னுறைவானும் விடைகாட்டுங் கொடியானே.

கீதத்தை மிகப்பாடு மடியார்கள் குடியாக
பாதத்தை தொழ நின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம் பெறுவ ரையுற வேண்டா வொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினை யாரவர் தம்மைத் தோயாவாந் தீவினையே.

நீதாளு நன்னெஞ்சே நினைகண்டா யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட் டெம்பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளு நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

## வாயுசந்தி – வட-மேற்கு

பண் : **தக்கேசி** இராகம் : **காம்போதி**

பூவார்மலர் கொண்டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்களெரித்த வன்று மூவர்க்கருள் செய்தார்
தூமா மழைநின் றதிர வெருவித் தொறுவின் நிரையோடும்
ஆமாம் பிணைவந் தணையுஞ்சாரல் அண்ணாமலையாரே.

வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை யெருதேறி
பூதஞ்சூழப் பொலிய வருவார் புலியினுரி தோலார்
நாதா வெனவும் நக்காவெனவும் நம்பா வெனநின்று
பாதந் தொழுவார் பாவந்தீர்ப்பார் பழன நகராரே.

பொன்னு மெய்ப்பொருளுந் தருவானைப்
போகமுந் திருவும் புணர்ப்பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறு ப்பானைப்
பிழையெலாந் தவிர பணிப்பானை
இன்ன தன்மைய னென்றறி யொண்ணா
எம்மானை யெளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழனத் தணி
ஆரூரானை மறக்கலுமாமே.

அந்தணாளனுன் அடைக்கலம் புகுத
அவனக் காப்பது காரணமாக
வந்த காலன் றனாருயி ரதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவ்வினாய்க் குன்றன் வண்மை கண்ட டியேன்
எந்தை நீயெனை நமன்றமர் நலியில்
இவன் மற்றென் னடியானென விலக்கும்
சிந்தையால் வந்துன் றிருவடி யடைந்தேன்
செழும் பொழிற்றிருப் புன் கூருளானே.

## குபேரசந்தி – வடக்கு

**பண் : தக்கராகம்** இராகம் : **காம்போதி**

மடையில் வாழை பாயமாதரார்
குடையும் பொய்கைக் கோலக்காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவமென் கொலோ.

விதியாய் வினையாய் விளைவின் பயனாகிக்
கொதியா வருகூற்றை யுதைத்தவர் சேரும்
பதியாவது பங்கய நின்றலறத் தேன்
பொதியார் பொழில் சூழ் புகலிந்நகர்தானே.

மூவருமாகி யிருவருமாகி முதல்வனுமாய் நின்ற மூர்த்தி
பாவங்க ளீர்தர நல்வினை நல்கிப் பல்கண நின்று பணிய
சாவமதாகிய மால்வரை கொண்டு தண்மதில் மூன்று மெரித்த
தேவர்கள்தேவ ரெம்பெருமானார் தீதில் பெருந்துறையாரே.

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்சடை சுற்றி முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ்
சூழ வாரிடமும் பலிதேர்வ
ழணிவளர் கோலமெலாஞ் செய்து
பாச்சி லாச்சிரமத் துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையைவாட
மயல் செய்வதோ விவர்மாண்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈசானசந்தி — வட-கிழக்கு

பண் : சாதாரி                                        இராகம் : **பந்துவராளி**

இன்னவுரு வின்னநிற மென்றறிவதே லரிது நீதி பலவுந்
தன்னதுரு வாமென மிகுந்தவநீதி யொரு தானமர் விட
முன்னை வினைபோம் வகையினான் முழுதுணர்ந்து முயல்கின்ற முனிவர்
மன்ன விருபோது மருவித்தொழுது சேரும்வயல் வைகாவிலே.

கோலமா மலரோடு தூபமுஞ் சாந்தமுங் கொண்டு போற்றி
வாலியார் வழிபடப் பொருந்தினார் திருந்து மாங்கனிகளுந்தி
யாலுமாகா விரிவட கரையடை குரங்காடுதுறை
நீலமாமணி மிடற் றடிகளை நினைய வல்வினைகள் வீடே.

மருதவை மந்திரமறுமை நன்னெறியவை மற்றுமெலா
மருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தை செய் நன்னெஞ்சமே
பொருந்து தண்புற வினிற் கொன்றை பொன்சொரிந்தரத் துன்றுபைம் பூஞ்
செருந்தி செம்பொன் மலர்திரு நெல்வேலியுறை செல்வர்தாமே.

தலையே நீ வணங்காய்
தலைமாலை தலைக்கணிந்து
தலையாலே பலிதேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

திருச்சிற்றம்பலம்

முற்றும்

<u>மு. குறிப்பு:</u>

ஒவ்வொரு தேவாரத்தையும் பாடத் தொடங்கும் பொழுதும் முடிக்கும் பொழுதும் "திருச்சிற்றம்பலம்" என்று உச்சரிக்கக் கடவர் ஒரு முறை உச்சரிப்பின் செல்வத்தைத் தருவதாகிய திருவைந்தெழுத்து இருபத்தொராயிரத்து அறுநூறு தரம் உச்சரிப்பதற்குச் சமானமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இறையடி சேர்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்
தனது பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் சகிதம்
கதிர்காமம் செல்லப் பிள்ளையாரைத் தரிசித்த போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
10
⁂
07
⁂
1939



உதிர்வு
03
⁂
10
⁂
2015



மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தான
பரிபாலன சபை பொருளாளர்

**திரு. தி. முருகதாஸ் அவர்களின்**

அன்புத் தாயார்

## அமரர் திருமதி திருஞானசம்பந்தமூர்த்தி செல்லம்மா

இறைபதம் அடைந்தமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைச் சமர்ப்பிக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்

**மூளாய் வதிரன்புலோ**
**சித்திவிநாயகர் தேவஸ்தான**
**பரிபாலன சபை**

மூளாய்,
சுழிபுரம்.
06-10-2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 10 | | 03 |
| ⁂ | | ⁂ |
| 07 |  | 10 |
| ⁂ | | ⁂ |
| 1939 | | 2015 |

தொல்புரம் - மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாய சங்க

இணைமுகாமையாளரும் கணக்காளராகவும் கடமையாற்றி வரும்

**திரு. தி. முருகதாஸ் அவர்களின்**

அன்புத் தாயார்

## அமரர் திருமதி திருஞானசம்பந்தமூர்த்தி செல்லம்மா

அவர்கள் காலமான செய்தி எங்கள் யாவருக்கும் பெருந்துயரைத் தந்துள்ளது. அன்னாருக்கு எங்கள் அஞ்சலிகளைத் தெரிவித்து குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுகின்றோம்.

அம்மையாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்தனை செய்து இறைவன் பாதத்தை வணங்குவோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்

**தொல்புரம் மூளாய்**

**ஐக்கிய பரஸ்பர சகாய சங்க**

**நிர்வாகிகள்**

மூளாய்,
சுழிபுரம்.
06-10-2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் பூக்கள்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 10 | | 03 |
| 07 | | 10 |
| 1939 | | 2015 |



எமது மன்ற முன்னாள் உறுப்பினர்களான

**திரு. தி. முருகதாஸ், திரு தி. ஜெயதாஸ்**

ஆகியோரின் அன்புத் தாயார்

## அமரர் திருமதி திருஞானசம்பந்தமூர்த்தி செல்லம்மா

பண்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்ந்தவர்
வந்தது வாழ்வதற்கும் வாழ வைப்பதற்கும்
வானவர் போற்ற கடமை முடிந்தது போலும்
படுத்துழலாது பக்குவம் கெடாது பாங்கான நன்மக்கள்
எண்ணியபடி சீராக வாழ்ந்த உத்தமர்
பூவுலகிலிருந்து உபசாரம் நிறைவாகக்
கண்டுமகிழ்ந்து மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர்
பாதத்தில் அமைதிகாணப் பயணமானார்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மூளாய்,
சுழிபுரம்.
06-10-2015

பிரிவால் துயருறும்
**மூளாய் இந்து இளைஞர் மன்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குத்துவிளக்கு ஏற்றும் முறைகளும், தத்துவங்களும்

பெண் திருமணமாகி, புகுந்தவீடு செல்லும் போது அந்த வீட்டிற்குவிளக்கு ஏற்றச் செல்வதாகப் பேசப்படுகின்றது.

விளக்கின் ஐந்து முகங்களும் பெண்ணுக்கான ஐந்து இலக்கணங்களைக் குறிப்பிடுவதாகும்.

1. பொறுமை
2. சகிப்புத்தன்மை
3. விட்டுக்கொடுக்கும் தன்மை
4. சமயோசித புத்தி
5. வைராக்கியம் (நல்ல காரணங்களுக்காக)

வாழ்வு இனிமையாக நடைபெறவும் வாழ்வில் முன்னேறவும் இந்த ஐந்து குணங்களும் துணைபுரியும்.

விளக்கு தானாக அணையவிடாமல் ஒரு பூவால் ஒற்றி அணைக்க வேண்டும். வாயால் ஊதியோ, கையால் விசிறியோ அணைக்கக் கூடாது.

***விளக்கை நிறுத்துவதற்கென்று மங்கலச் சொற்கள் சில உள்ளன :***

“விளக்கை அணைச்சிடு” என்று சொல்லக்கூடாது. விளக்கைப் பெரிசுபடுத்து, விளக்கை அமர்த்து, விளக்கைக் குளிரவை போன்ற மங்கலச் சொற்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.

“விளக்கைத் தூக்கி வை” என்று சொல்வதற்குப் பதிலாக “விளக்கை நகர்த்தி வை” என்று சொல்ல வேண்டும்.

வீட்டில் ஏற்றப்படும் திருவிளக்கே இலட்சுமி கடாட்சமாகும். மாலை ஆறு மணிக்கு வீட்டின் பின்கதவைச் சாத்திவிட்டு முன்கதவைத் திறந்து, வாசலில் நீர் தெளித்து, கோலமிட்டு, வீட்டில் விளக்கு ஏற்றப்படும். இதன் பொருள் முன்வாசல் வழியாக வரும் இலட்சுமி பின்வாசல் வழியாகச் சென்று விடக்கூடாது என்பதுதான். தீபம் ஏற்றிய பின், பின் கதவு திறக்கப்படலாம். அதாவது இலட்சுமி தீப ஒளியாக வீட்டில் திகழ்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீபமும் திசைகளும்

1. **கிழக்கு** - துன்பம் நீங்கும், பீடைகள் அகலும், சகல சம்பத்தும் உண்டாகும்.
2. **மேற்கு** - கிரகதோஷம், பங்காளிப்பகையை நீக்கும்.
3. **வடக்கு** - திரவியம், செல்வம், மங்களம் உண்டாகும்.
4. **தெற்கு** - தெற்குப் பார்த்துத் தீபம் ஏற்றக் கூடாது.

(இதனால்தான் வாஸ்து சாஸ்திரத்தில் தெற்கு நோக்கி பூஜை அறை வைக்க அனுமதி இல்லை)

பூஜை நேரங்களில் மட்டும் எரிவது - சாதாரண விளக்கு
எப்பொழுதும் எரிந்து கொண்டு இருப்பது -நந்தா விளக்கு
காலை, மாலை வேளைகளில் மட்டும் எரிவது -சந்தி விளக்கு

## விளக்குத் திரியின் பலன்கள்

1. தாமரைத் தண்டில் திரி போட்டால் ஜென்ம பாவங்கள் நீங்கும்.
2. வாழைத்தண்டு நூல்திரி போட்டால் குலதெய்வக் குற்றம், சாபம் நீங்கும்.
3. புது மஞ்சள் சேலை துண்டில் திரி போட்டால் தாம்பத்தியத் தகராறு நீங்கும்.
4. புது வெள்ளை வஸ்திரத்தில் பன்னீரை விட்டு உலரவைத்துப் போட்டால் இலட்சுமி கடாட்சம் வந்து சேரும்
5. சிவப்பு நிறத் துணியால் திரிபோட்டால் திருமணத் தடை நீங்கும், மகப்பேறு உண்டாகும்.

## விளக்கு ஏற்ற உகந்த எண்ணெய் வகைகள்

1. நெய்-சகல செல்வமும் பெருகும், நலனும் உண்டு. முருகன் சந்நிதியில் நெய் விளக்கு ஏற்றுவது மரபு.
2. நல்லெண்ணெய் - நல்லெண்ணெயில் விளக்கேற்றினால் எல்லாப் பீடையும் விலகும். யமபயம் இருக்காது.
3. ஆமணக்கு எண்ணெய், விளக்கெண்ணை- சகல சம்பத்தும் உண்டாகும்.
4. ஐந்துவகை எண்ணெகள் - நெய், விளக்கெண்ணெயை, வேப்ப எண்ணெய், இலுப்பை எண்ணெய், தேங்காயெண்ணெய் ஆகிய ஐந்தையும் விளக்கில் ஊற்றி ஒரு மண்டலம் (45 நாட்கள்) பூஜை செய்வதால் தேவியின் அருள் பூரணமாகக் கிடைக்கும்.

**(கடலை எண்ணையில் விளக்கு ஏற்றக் கூடாது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளக்கு வகைகள்

1. வெண்கல விளக்கு - பாவம் போகும்.
2. இரும்பு விளக்கு - சனிக்கிழமை இரும்பு அகலில் தீபம் ஏற்றுவது சனீஸ்வர பகவானுக்கு பிரதீயாகும்.
3. மண் விளக்கு - வீரிய விருத்தியை அளிக்கும்.
4. வெள்ளி அல்லது பஞ்சலோக (தங்கம், வெள்ளி, பித்தளை, இரும்பு, செம்பு) விளக்குகள் - இவை பூஜைக்கு உகந்தவை, சிறப்பைத் தரும்.

**(எவ் சில்வர் விளக்கு பூஜைக்கு உகந்தவை அல்ல)**

## முகங்களுக்கு உரிய பலன்கள்

1. ஒரு முகம் - மத்தியபலன்
2. இரண்டு முகம் - குடும்ப ஒற்றுமை பெருகும்.
3. மூன்று முகம் - புத்திரசுகம் தரும்.
4. ஐந்து முகம் - செல்வம் பெருகும், சகல சௌபாக்கியமும் கிடைக்கும்

**(விசேடகாலங்களில் ஐந்து முகங்களும் ஏற்றப்பட வேண்டும்)**

## விளக்கு

1. நம் அக இருள் நீக்கும்.
2. நற்சிந்தனை உண்டாகும்.
3. பலநல்ல சிந்தனை மிளிரச் செய்யும்.
4. பண்பு நலன்கள் பெருகும்.
5. பாவங்களைப் போக்கும்.

## உங்கள் இராசிகளுக்கேற்ப வீட்டு வாயிலை அமைத்துக் கொள்ளுங்கள்

**கிழக்கு வாயில்** - இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம்

**தெற்கு வாயில்** - சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம்

**மேற்கு வாயில்** - விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம், மேடம்

**வடக்கு வாயில்** - கும்பம், மீனம், மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பட்டினத்தடிகளார் தாயின் பிரிவின் போதுபாடியது*

# அன்னைக்கு அன்புப் பாடல்கள்

முற்றுந் துறந்த முழு ஞானியார் பட்டினத்துப் பிள்ளையார் தாயன்பைத்துறக்க ஆற்றமையுற்றுத் துவண்ட நெஞ்சினராய் மார்வராப் பொழி கண்ணினராய் இறுதிக் கடனியற்றுங்கால் திருவாய் மலர்ந்து பத்து வெண்பாக்கள் அருளினர். அவை உள்ளம் உருக்குவன.

## அன்னை உடம்பினை ஈமவிறகின்மேல் கிடத்தியபொழுது பாடியவை

### வெண்பா

ஐயிரண்டும் திங்களாய் அங்கமெல்லாம் நொந்துபேற்று
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் செய்யவிரு
கைப்புறுத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
யெப்பிறப்பிற் காண்பே னினி.

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்து
யந்திபகலாயச் சிவனை யாதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
வெரியத் தழல்மூட்டு வேன்.

வட்டிலிலும் தொட்டியிலும் மார்மேலுந் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து
முட்ட சிறலிட்டு சீராட்டிக் காப்பாற்றும்
தாய் தனக்கோ விறகிலிட்டுத்தீ மூட்டுவேன்.

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்தி
முலைதந்து வளர்த்தெடுத்து தாணாமே
அந்தி பகலாய் கையிலே கொண்டென்னை
காப்பாற்றும் தாய்தனக்கோ மெய்யிலே தீ மூட்டினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின் வருமிரண்டு வெண்பாவும் அன்னையாருக்கு வாய்க்கரிசியிட்ட பொழுது மலர்ந்தவை

அரிசியோ நானிடுவே னாத்தா உனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருசியுள்ள
தேனே யமிர்தமே செல்வத் திரவியப்பு
மானே வெனவழைத்த வாய்க்கு.

அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேன் முகம்வைத்து முத்தாடி யென்றன்
மகனேயென வழைத்த வாய்க்கு.

### விருத்தம்

முன்னையிட்டு தீ முப்புரத்திலே
பின்னையிட்டதீ தென்னிலங்கையில்
அன்னையிட்டதீ அடிவயிற்றிலே
யானுமிட்டதீ மூழ்க மூழ்கவே.

### வெண்பா

வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்பல்
ஆகுதே பாவியே னையகோ - மாகக்
குருவி பறவாமற் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ - சந்ததமும்
உன்னையே நோக்கி யுகந்துவரங் கிடந்தென்
தன்னையே யின்றெடுத்த தாய்,

## அன்னையின் சாம்பலில் பால் தெளிக்க அன்பரை அழைத்தல்

வீற்றிருந் தாளன்னை வீதிதனி லிருந்தாள்!
நேற்றிருந்தா ளின்றுவெந்து நீறானாய் - பாற்றெளிக்க
எல்லீரும் வாருங்க ளேதென் றிரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருந்த வேண்டாம்

பிறப்பு வரும் மனிதர்களில் இறப்புமொன்றும் உண்மை
இறப்பு வரும் வரையினிலே அவர்களுணர்வது இல்லை
இறப்பும் பிறப்பும் ஆன்மாவின் சட்டைமாற்றம்
அது வாழ்ந்த உடல் என்பது ஒருநாள் அழியும்
சிறு உறக்கம் என்பது எமை நாடி வருவது போலவே
பெருமுறக்கம் ஒன்றுனக்கு வருவது தான் சாவு
புல்லாகிறார், சிலர் பூடாகிறார், புழுவாகிறார், சிலர் மரமாகிறார்
மிருகமாக பறவையாக பிறவி எடுத்தனர் - சிலர்
பாம்பாக, மனிதராக, பேயும் ஆயினர்
கணங்களாயினர், அசுரர் ஆயினர், முனிவர் ஆயினர்,
சிலர் தேவராயினர்.
அறம் ஒன்றே ஆன்மாவோ டிணைந்து செல்லும்
மாடி, மனை, மனைவி, மக்கள் எதுவும் சொல்லா
இருப்பவர்கள் பிரிவுக்காக அழுதுதான் என்ன
இதேபோல இறப்புக்களை கண்டு அஞ்சாமல்
பிறவிப்பயன் பெற்று பேரின்பம் தானடைய
ஐயன் தாள் பற்றி பற்றறுத் துய்வீரே.

இவன் பிறப்பதுமில்லை. இவன் ஒருமுறை இறந்து பின்னர் இல்லாது போவதுமில்லை. இவன் இறப்பற்றவன், அனவரதன், சாசுவதன், பழையோன்: உடம்பு கொள்ளப்படுகையில் இவன் கொல்லப்படான்.

நைந்த துணிகளைக் கழற்றி எறிந்து விட்டு மனிதன் புதிய துணிகள் அணிவது போல் ஆத்மா நைந்த உடல்களைக் களைந்து புதியனவற்றை எய்துகின்றது.

இந்த ஆத்மாவை எவராலும் எதனாலும் கொல்லமுடியாது! ஆதலால் நீ எந்த உயிரின் பொருட்டும் வருந்துதல் வேண்டாம்! நீ ஆத்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவெழா நிலையில் நவில்கின்றோம் நன்றி

**"எந்நன்றி கொன்றார்க்கு உய்வுண்டாம் - உய்வில்லை**
**செய்நன்றி கொன்ற மகற்கு"**

எங்கள் குடும்பத் தலைவர் இவ்வுலகில் வாழுகின்றபோது அவரை அன்போடு நேசித்து நடந்து கொண்டவர்களுக்கும் அவர் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு இல்லம் வந்து எல்லையற்ற உதவிகள் ஆற்றியோரிற்கும் அனுதாபம் தெரிவித்தோர்க்கும் இறுதிக் கிரியைகள் ஆற்றியோரிற்கும் வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதி ஊர்வலத்தின் போது மயானம் வரை வந்து ஆறுதல் அளித்தவர்கட்கும் இம்மலரை அச்சிட்டுத்தந்த சங்கானை திருமொழி அச்சகத்தாருக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த அன்புள்ளங் கொண்ட உங்கள் எல்லோருக்கும் நாம் எமது காலத்தால் அழியாத நன்றிகளையும் கடமைப்பாட்டினையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.





இங்ஙனம்
**குடும்பத்தினர்**

"அன்னை இல்லம்",
மூளாய் கிழக்கு,
சுழிபுரம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




✱ இக்குறி அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## கீதையில் இருந்து.........

போவதைக் கண்டு கலங்காமல் வருவதைக்கண்டு மயங்காமல் பயந்து பயந்து நடுங்காமல் கோபத்தால் குதிக்காமல் இருக்கிறனோ அந்த மனிதன் தான் உறுதியான அறிவு வாய்ந்தவன்.

விளைந்து வரும் உன்மனதில் விருப்பங்களைத் துறந்தவன் தன்னிலே தானாகித் தனக்குள் மகிழ்ச்சி பெற்றால் அப்போது அவன் நிலையான புத்தி உடையவன் என அழைக்கப்படுகின்றான்.

ஒரு புக்கம் நன்மை ஒரு பக்கம் தீமை இரண்டிலும் வீழ்ச்சி அடையாதவனாய் என்ன என்ன என்று ஆவல் அடையாதவனாய் எவன் இருக்கிறானோ அவன் அறிவே நிலையானது.

தேவைப்படும் போது ஆமை தன் உடம்பை ஓட்டுக்குள் இழுத்துக் கொள்கிறது. இது போல் எப்போது தன் ஐம் புலன்களையும் உணர்ச்சிகள் தாக்காமல் எவன் மீட்டுக் கொள்கிறானோ அவன் அறிவே நிலையானது.

திருமொழி அச்சகம். சங்கானை. 021 2251066. 021 3215867

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org